சாட்சிய வாக்குமூலம்
மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.
முன்னிலை:- திருமதி. ஆர். சத்யதாரா., எம்.ஏ., எம்.எல்.,
சிறப்பு அமர்வு வழக்கு எண் 273/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 3 (LW-2) | நாள் | 23.06.2026 |
| பெயர் | தமிழ்செல்வன் | வயது | 34 |
| தந்தை பெயர் | செல்வராஜ் | ஊர் | தாழந்தொண்டி |

(குற்றம் சாட்டப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு திரு. T. ரவிசங்கர், இருக்கை எழுத்தர் நிலை -1 என்பவரால் உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தாழந்தொண்டி, மேட்டுதெருவில் வசித்து வருகிறேன். கட்டுமான பொறியாளராக வேலை செய்துவருகிறேன். ஆஜர் எதிரி பக்கத்து ஊரை சேர்ந்தவர். அசா 1 , 2 ஆகியோரை தெரியும். வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கவும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலிஸ் விசாரணையில் 09.04.2020 தேதியில் இரவு 9.15ல் மணியளவில் நானும் பிரவின், கரன் ஆகியோர் தாழந்தொண்டி அம்பிகாவிற்கு சொந்தமான சவுக்கு தோப்பிற்கு இயற்கை உபாதை கழிக்க சென்றபோது பெண்ணின் அழுகுரல் கேட்டு அருகில் சென்று பார்த்தபோது வைதேகி அழுதுகொண்டிருந்ததாகவும் அவரை விசாரித்தபோது மோகன்ராஜன் தன்னை காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறி அவருடன் சவுக்கு தோப்பிற்கு வந்தபோது தன்னை கட்டாயப்படுத்தி உடலுறவு வைத்துக்கொண்டதாகவும் திருமணம் செய்து கொள்ள சொன்னபோது அவர் தாழ்த்தப்பட்ட சாதியை சேர்ந்தவர் என்று சாதி பெயரை சொல்லி கெட்டவார்த்தையால் திட்டினார் என்றும் எங்களிடம் சொன்னதாவும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும் பிரவின், கரன் எங்கள் ஊர் தலைவர் ரமேஷ்க்கு தகவல் சொல்லி மோகன்ராஜ் உறவினர்களான பாஸ்கர், அறிவழகனை வரசொல்லி அவர்களிடம் நடந்ததை சொல்லி மறுநாள் மோகன்ராஜை அழைத்துவர சொன்னோம் என்றும் வைதேகிஅவரின் அக்கா ஆனந்தவள்ளியிடம் ஒப்படைத்தோம் என்றும்

S. Tamil

சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மறுநாள் மோகன்ராஜை அவர் ஊர்காரர்கள் அழைத்து வராததால் சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைதேகி புகார் கொடுப்பதாக சொன்னார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சீர்காழி காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

S Tamhi

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து, எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

சாட்சிய வாக்குமூலம்

மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- திருமதி. ஆர். சத்யதாரா., எம்.ஏ., எம்.எல்.,

சிறப்பு அமர்வு வழக்கு எண் 273/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 4 (LW-11) | நாள் | 23.06.2026 |
| பெயர் | கரன் | வயது | 27 |
| தந்தை பெயர் | மதியழகன் | ஊர் | தாழந்தொண்டி |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு திரு. T. ரவிசங்கர், இருக்கை எழுத்தர் நிலை -1 என்பவரால் உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

தாழந்தொண்டி அம்பேத்கர் நகரில் வசித்து வருகிறேன். நான் நிதி நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அசா 1 முதல் 3 வரையானவர்களை தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்னிடம் போலிசார் கையெழுத்து கேட்டதால் நான் கையெழுத்துபோட்டேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்கவும் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலிஸ் விசாரணையில் 09.04.2020 தேதியில் இரவு 9.15ல் மணியளவில் நானும் பிரவின், தமிழ்செல்வன் ஆகியோர் தாழந்தொண்டி அம்பிகாவிற்கு சொந்தமான சவுக்கு தோப்பிற்கு இயற்கை உபாதை கழிக்க சென்றபோது பெண்ணின் அழுகுரல் கேட்டு அருகில் சென்று பார்த்தபோது வைதேகி அழுதுகொண்டிருந்ததாகவும் அவரை விசாரித்தபோது மோகன்ராஜ் தன்னை காதலிப்பதாக ஆசை வார்த்தை கூறி அவருடன் சவுக்கு தோப்பிற்கு வந்தபோது தன்னை கட்டாயப்படுத்தி உடலுறவு வைத்துக்கொண்டதாகவும் திருமணம் செய்து கொள்ள சொன்னபோது அவர் தாழ்த்தப்பட்ட சாதியை சேர்ந்தவர் என்று சாதி பெயரை சொல்லி கெட்டவார்த்தையால் திட்டினார் என்றும் எங்களிடம் சொன்னதாவும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நானும் பிரவின், தமிழ்செல்வன் ஆகியோரும் எங்கள் ஊர் தலைவர் ரமேஷ்க்கு தகவல் சொல்லி மோகன்ராஜ் உறவினர்களான பாஸ்கர், அறிவழகனை வரசொல்லி அவர்களிடம் நடந்ததை சொல்லி மறுநாள் மோகன்ராஜை அழைத்துவர சொன்னோம் என்றும் வைதேகியை அவரின் அக்கா ஆனந்தவள்ளியிடம்

M. [signature]

ஒப்படைத்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. மறுநாள் மோகன்ராஜை அவர் ஊர்காரர்கள் அழைத்து வராததால் சீர்காழி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வைதேகி புகார் கொடுப்பதாக சொன்னார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சீர்காழி காவல் துணைக்கண்காணிப்பாளர் என்னை விசாரித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.

M. [signature]

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature]

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை